# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

11வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

☎ 416-282-8059

416-282-4978

நதி 11 SEPTEMBER 01, 2001 பாலம் 17



- இந்தியாவில் பல நிறங்களுடைய மழை பெய்கின்றதா..? (பக். 02)
- மனித இயல்பை மாற்றக் கூடிய ராசி / காலநிலைகள் (பக். 05)
- உலகிலே சிறந்த பந்து வீச்சு வீச்சாளர்.....? (பக். 06)
- அன்னை தெரேசாவின் பெருமைகள்....? (பக்.09)
- பூமியில் உள்ளவர்களைவிட அறிவாளிகளா ஏலியன்ஸ்? (பக். 13)
- முதலாவது தேசிய விருது பெற்றவர்.... (பக். 07)
- வீட்டில் இரண்டாவது வதிவிடம் உருவாக்கலாமா? (பக். 17)
- தமிழர் வாழ்வில் கனடிய பொருளாதார நிலை (பக். 10)
- இன்ரநெற்றும் கடவுள் நம்பிக்கையும் (பக். 12)


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- கலைந்த மனதுடன் ஒரு மணிநேரம் தியானம் பண்ணுவதைவிட ஒருமை மனதுடன் ஒரு நிமிடம் தியானம் பண்ணுவது மேல்
- அறியாமையுள் பெரிய அறியாமை தன்னைப் பாவி என்று நினைத்துக் கொள்ளுதல் தன்னை ஒன்றுக்கும் உதவாதவன் என்று நினைத்துக் கொள்ளுதல் வேண்டாம்.
- உற்றார், உறவினர் ஒருவனை மரணத்தினின்று காப்பாற்றமாட்டார்கள். தனது நேரான வாழ்க்கையோ மரணத்துக்கு அஞ்சாத மனப்பான்மையைத் தருகிறது.

## உன்னை அறிந்தால்

*"பாதை தவறிய கால்கள் வீடு வந்து சேருமா...." பயணம் செய்யத் தொடங்கும் போது முடிவிடம் தெரியாமல் புறப்படலாமா? பாதையைத் தவறவிட்டால் குறிப்பிட்ட இடத்தை சென்று அடையலாமா? கடலில் செல்லும் கப்பல் திசையை தவறவிட்டால் என்ன நடக்கும். திசையைத் தவறவிடுவதும், வாழ்க்கையின் நோக்கத்தைக் கைவிடுவதும் வாழ்வின் தோல்விக்கே வழி சமைக்கும். காலையில் துயில் எழும் போது தொழிலிற்கு இத்தனை மணிக்கு நிற்க வேண்டும் என்பது நோக்கமாக வைத்து செயல்படுகின்றோம். அதற்கு ஏற்றாற் போல் தேவைகளை முடித்து, குறிப்பிட்ட நேரத்திற்கு புறப்பட்டு, சரியான வீதியால் சென்று எமது தொழிலகத்தை அடைகின்றோம். இதுவே எமது அன்றைய குறிக்கோள்கள். இவற்றைச் சரியாக செய்தால் நாம் இதில் வெற்றி கொள்கின்றோம். இதே முறையை நாம் எமது வாழ்வில் வெற்றி காணுவதற்காக மாற்றி அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.*

*குறுகிய கால, நீண்ட காலக் குறிக்கோள்களை உருவாக்கி, சிறிது சிறிதாக அதனை நோக்கி முன்னேற வேண்டும். நிச்சயம் குறிக்கோள் நிறைவேறும் என்றே அறிஞர்கள், வெற்றி பெற்றவர்கள் கூறுகிறார்கள். சரியான குறிக்கோள்களை இன்றே உருவாக்கி குறிப்பிட்ட பாதையில் சென்றால் வெற்றி நமதே.*

*நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!*

-நெற்றிக்கண்ணன்




RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

**Raja M. Mahendran, P.Eng.**
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

இழந்த தலைமுடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787
2602 Eglinton Ave.E.
Toronto, Ont.,M1K 2R9

☎: (416) 269-8151
www.sabona.ca
www.tamilclub.com/sabona


*பாசமுள்ள தாய்மார்களும் தந்தைமார்களும் மட்டுமே இருக்கின்றனர். ஆனால் பாசமுள்ள மகன்களும் மகள்களும் இல்லை.* — *சீனப் பழமொழி*


Singapore Communication

| FREE PAGER | $35.00 |
|---|---|
| -One Year Service $99.00 | 100 Min Free |
| -Activation $25.00 | Mon-Fri 6pm-8am Free |
| -Free Panasonic Pager | Fri: 6pm - Mon 8am Free |
| More Info Call: | 400 First Incoming Min Free |
| 416-745-2378 (Sathi) | C/W, C/F, Call ID Free |
| 416-490-7703 (Praba) | FREE GIFT AVAILABLE in store |
| 416-589-4636 (Hot Line) | HOT LINE: 416-980-4525 |



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்.

5 Greenleaf Terr. , Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை ஆகிய
இடங்களுக்கும் கடுகதியில்
பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

LIBERTY MUTUAL

© 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (87)

-விஜே குலத்துங்கம்



இந்தியாவின் தெற்குப்புற மாநிலங்களில் ஒன்றாகிய கேரளாவின் சில பகுதிகளில் கடந்த சில வாரங்களாக பல வர்ணங்களில் மழை பெய்ததாகக் கூறப்பட்டது. சில வாரங்களுக்கு முன்னர் கோட்டயம், இடுக்கி ஆகிய இடங்களில் ஊதாச் சிவப்பு நிற மழை பெய்ததாக செய்திகளில் அடிபட்டது. இன்னும் வேறு எட்டு மாவட்டங்களிலும் பச்சை, பிரவுண், கறுப்பு நிறங்களில் மழை பெய்ததாக கூறப்பட்டது. நல்ல காலமாக இரத்தச் சிவப்பு நிறத்தில் மழை பெய்யவில்லை. இல்லையென்றால் இந்தியா போன்ற நாடுகளானதால் கடவுள்தான் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றார், ஏதாவது ஆபத்து வரப் போகின்றது என கூறியிருப்பார்கள். திருவனந்தபுரத்திலுள்ள புவியியல் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மக்களால் சேகரிக்கப்பட்ட இந்த பல்வேறு வர்ணங்களில் இருந்த மழை நீரை ஆராய்ந்து வருகின்றார்கள். இதன் சரியான காரணங்கள் இன்னும்அறியப்படவில்லை. ஆனால் இதற்கு முன்னர் உலகின் பல்வேறு பகுதிகளில் பெய்த வர்ண மழையினைப் பற்றிப் பார்ப்போம்.

1818 ஆம் ஆண்டிலிருந்து இப்படியான நிகழ்வுகள் நடந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. 1818 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி இத்தாலியிலுள்ள ரேபிள்ஸ் என்னும் இடத்தில் சிவப்பு நிற மழை பெய்தது. மழை பெய்த பின்பு காய்ந்து கிடந்த ஒரு பௌடர் போன்ற பதார்த்தத்தை ஆராய்ந்த போது அதில் 33% சைலக்ஸ், 15.5% அலிமினாவும், 9% காபோனிக் அமிலமும், 1% குரோமும் காணப்பட்டது. இந்தப் பதார்த்தம் எரியக் கூடிய பொருளாகவும் இருந்தது. அந்தக் காலத்தில் இருந்து விஞ்ஞான அறிவை வைத்து இது எரிமலையில் இருந்து வெளிப்பட்ட தீக்குழம்பிலிருந்து வந்தது என முதலில் கூறப்பட்டது. சில விஞ்ஞானிகள் இந்த பதார்த்தத்தில் குரோம் இருந்ததால் இது எரிந்த விண்கற்களில் இருந்து வந்திருக்கலாம் என கூறினார்கள். 1872 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் இத்தாலியிலுள்ள சிசிலி என்னும் இடத்திலும் சிவப்பு மழை பெய்தது. இதில் இரும்பு, கல்சியம் காபனேற்று மற்றும் சேதனப் பொருட்களும் காணப்பட்டன. இவை விண்கற்கள் எரிந்து அந்தத் தூசிப் படலம் மழையில் நனைந்து சிவப்பு மழையாக பெய்தது என உறுதி செய்யப்பட்டது.

ஆனால் சில இடங்களில் உண்மையாக இரத்தமே மழையாகப் பெய்துள்ளது. ஆனால் இது புராணக் கதையல்ல. 1890 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி கலபிறியாவிலுள்ள மெசிக்னாடி என்ற இடத்தில் இரத்த மழை பெய்ததாக தெரிவிக்கப்பட்டது. இத்தாலியின் வானிலை அவதான நிலையம் இந்த மழையில் வந்த இரத்தம் பறவைகளினுடையது எனக் கூறப்பட்டது. இடத்திற்கு இடம் பெயரும் பறவைகள் மிக அதிகமான தொகையில் கூட்டமாக பறந்து செல்லும். இப்படிச் சென்ற பறவைகள் கடுமையான சுழல் காற்றினால் அகப்பட்டு அவற்றின் உடல்கள் சிதறிக்கப்பட பறவைகளின் இரத்தம் மழையுடன் சேர்ந்து இரத்த மழையாக பெய்தது.

இதே போல 1869 ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் ஒரு தோட்டத்தில் இரத்தமும், சதைத் துண்டுகளும் வந்து விழுந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் திகதி கிரீஸ் நாட்டில் உள்ள தெசாலோனிக்கா என்ற இடத்திலும் செந்நிற மழை பெய்தது. ஆனால் இது இரத்தம் அல்ல. சகாராப் பாலைவனத்திலுள்ள சிவப்பு நிறக் களிமண்ணை பலமான காற்று வீசிய போது அது அள்ளிக் காவிச் சென்ற மழையில் கழுவப்பட்டு அது செந்நிற மழையாகப் பெய்தது. அமெரிக்காவிலுள்ள மசக்கூசேயிலுள்ள டன்ஸ்டபிள் என்னும் இடத்தில் 1959 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் பலத்த மழையொன்றின் போது மழைநீர் மஞ்சட் பச்சை நிறமாகப் பெய்ததில் வசந்த காலத்தின் போதுதான் அநேகமான மலர்கள் மலருகின்றன. காட்டுப் பகுதியிலிருந்து பெரும் தொகையான மரங்களிலிருந்து பூக்களின் மகரந்தப் பொடிகள் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டு அது மழையில் கரைந்து மஞ்சள் பச்சை நிறமாகப் பெய்தது.

1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி பிரெஞ்ச் அல்ப்ஸ் பிரதேசத்தில் நீலநிற பனிமழை பெய்தது. இதுவும் சகாராப் பகுதியிலுள்ள ஒருவித கனிப்பொருள் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டு பனிமழையுடன் சேர அது நீலநிறமாகப் பெய்தது. சில ஆண்டுகளின் முன்னர் ஆப்கானிஸ்தானிலுள்ள மகரந்தப் பொடிகள் காற்றால் அள்ளிச் செல்லப்பட்டு, பின்னர் மழையில் கரைந்து மஞ்சள் நிற மழை பெய்தது. எனவே பல காரணங்களினால் பல வர்ணங்களில் மழை பெய்யலாம். இடம் பெயரும் பல்லாயிரக் கணக்கான பறவைகள் சுழல்காற்று போன்றவற்றால் தாக்கப்பட்டு இரத்த மழையாகப் பெய்யலாம். வெவ்வேறு நிறங்களிலுள்ள மகரந்த மணிகள் மழையில் கரையும் போது மஞ்சள் நிறத்திலிருந்து பச்சை நிறம் வரை பல வர்ணங்களில் மழை பெய்யலாம் சில இடங்களில் கனிப்பொருட்கள் காற்றால் அள்ளிச் செல்லப்பட்டு, அந்தக் கனிப்பொருளிலுள்ள இரசாயன மூலகங்களைப் பொறுத்தும் சேர்வைகளைப் பொறுத்தும் வெவ்வேறு நிறங்களில் மழை பெய்யலாம். இதே போல் வெவ்வேறு நிறங்களிலுள்ள களிமண் தூசுப் படலமும் அள்ளிச் செல்லப்பட்டு அவை கரைந்து வெவ்வேறு நிற மழையைக் கொடுக்கலாம். இதைவிட எரிமலை வெடித்து தீக்குழம்பு வெளியேறும் போது அவற்றிலுள்ள கனிப்பொருள் எரிந்து தூசிப் படலமாகி அவை கரைந்து மழையாகப் பெய்யும் போது வெவ்வேறு நிறங்களில் மழை பெய்யலாம். விண்வெளியில் இருந்து பூமிக்கு வந்து விழும் எரிக்கற்கள், விண்கற்கள் போன்றவை சில வேளைகளில் பூமியின் தரையை வந்து அடைய முன்னர் எரிந்துவிடும். இவற்றில் இருக்கும் கனிப்பொருட்களும் எரிந்து சாம்பலாகி, மழைநீரில் கரைவதால் வெவ்வேறு நிறங்களில் மழை பெய்யலா[ம்]. இதைவிட தற்போது உலகின் பல்வேறு இரசாயனப் பொருட்க[ள்] வெளியேற்றப்படுகின்றன. சில புகை வடிவமாக வெளியேறி வளிமண்டலத்தில் கரைந்து பின்னர் மழையுடன் சேர்ந்து வரலாம். இதனை அமில மழை என்றும் கூறுவார்கள். இதே போன்று தொழிற்சாலை விபத்துக்களின் போது இரசாயனப் பொருட்கள் வெளியேறி மழையில் கலந்து அவை வெவ்வேறு நிறங்களைக் கொடுக்கலாம்.

எனவே கேரளாவில் பெய்த மழைநீரை ஆராய்ந்து முடிவுகள் வந்ததும் எந்தக் காரணங்களால் வர்ண மழை பெய்ததெனக் கண்டுபிடிக்கலாம். சில வேளைகளில் மேற்கூறிய காரணங்கள் அல்லாத ஒரு புதிய காரணமாகவும் இருக்கலாம்.

*****************************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.*


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 122

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | ■ |
| | ■ | | ■ | ■ | | | 4 |
| | ■ | | ■ | 5 | ■ | | ■ |
| 6 | | | | | ■ | 7 | 8 |
| | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | |
| 9 | | | | | 10 | | |
| | ■ | ■ | ■ | ■ | | ■ | |
| ■ | 11 | | | | | ■ | |

**இடமிருந்து - வலம்**

1. தமிழ் ஈழத்தின் தேசிய கீதத்தை இயற்றியவர்
4. உபசாரம் செய் (வல - இட)
6. நண்பன்
8. வேள்வித் தீயில் இடும் உணவு (வல - இட)
9. ஒரு இராகம்
11. வெலி ஓயா என சிங்கள அரசால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட இடம்

**மேலிருந்து - கீழ்**

1. ஒரு காட்டு மிருகம். ஆங்கிலத்தில் Rhinoceros எனப்படும்.
2. தீபத்தால் ஆராதனை செய்தல்
3. பூசு
5. கொம்புள்ள அழகிய மிருகம்
7. பொழுது போக்கில் ஈடுபடுபவன் (கீழ் - மேல்)
8. நீதியற்றது
10. யானையின் கத்தல்

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் SEPTEMBER 28, 2001க்கு முன்னர் எமது விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | ட் | டு | நா | ய | க் | கா | ■ |
| ழை | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | சி |
| ■ | அ | ன் | னை | ■ | மை | ய் | வா |
| ம் | ■ | ■ | ச | ■ | ய | ■ | ஜி |
| ப | ள் | ளி | வா | ச | ல் | ■ | க |
| ம் | ■ | ■ | ■ | ஞ் | ■ | ■ | ணே |
| க | வி | ■ | ■ | சீ | ர் | ■ | ச |
| பூ | லா | ன் | தே | வி | ■ | தே | ன் |

**121இல் வெற்றி பெற்றோர்**

1) Mrs. P. Chinniah. Scarborough. Ont.
2) N. A. Nisha. Scarborough. Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*

*[Ken-Mark Plaza]*

## தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புக்ளுக்கு: **416- 267-0408**

## ஞானம்ஸ் ஸ்ரூடியோ



**Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8x12**

**Professional Photographer - கதிர்**

☎ : 416-750-8118

*2381 EGLINTON AVE.E.*

*KENNEDY / EGLINTON, SCARBOROUGH*

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing





- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

Apple Apple Apple

# துர்க்கை அம்மன் ரூர்ஸ்

ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு

மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு

அழையுங்கள்

☎416-283-3969

☎416-287-2824

மொன்றியல் ☎514-344-2591



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

தமிழர் நிர்வாகத்தில்



# ஒரு


# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

**ஆனால்**

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

**5 SAMOSA $1.00**



**Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)**

**☎ 416-332-8451**

**5200 FINCH AVE, SCARBOROUGH**

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்

## பகுதி (58)



ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துவோர், செலுத்த விரும்புவோர் வீதிப் பரீட்சைகளுக்கு தோற்றுவது, அது தொடர்பான ஒழுங்கு விதிகள் மாகாண நகர சட்ட விதிகளை மீறும் போது பெற்றுக் கொள்ளும் தண்டனை ரிக்கற்றுகள், அதனை தாமாகவே நீதிமன்றத்தில் எதிர்கொள்வது போன்ற விடயங்கள் தொட்டு ஏராளமான விடயங்களை கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம்.

இம் முறை ஒன்ராரியோ மாகாணத்திற்கு தற்காலிகமாக வருகை தந்தவர்கள் அல்லது நிரந்தரமாக இடம் பெயர்ந்தவர்கள் வாகனம் செலுத்துவது தொடர்பாக மேற்கொள்ளும் அடுத்த நடவடிக்கைகள், செயல்ப்பாடுகள் யாவை என்பது பற்றி இவ் அத்தியாத்தில் ஆய்வு செய்வோம்.

இவ் ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்த விரும்பும் ஒவ்வொருவரும் பதினாறு வயதுக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்பது நிர்ப்பந்தமாகும். பதினாறு வயதுக்கு குறையாத ஒருவர் இம் மாகாணத்திற்கு கனடாவின் ஏனைய மாகாணத்தில் இருந்தோ அல்லது இன்னொரு நாட்டில் இருந்தோ இடம் பெயர்ந்தால் அந்த நாட்டு சாரதி அனுமதிப் பத்திரத்துடன் சாதாரண வாகனங்களை இங்கு வந்து சேர்ந்து அறுபது நாட்களுக்கு தங்கள் நாட்டு லைசென்சினை உபயோகித்து வாகனம் செலுத்தலாம்.
(ஆனால் செலுத்தப்படும் வாகனத்திற்கு முறையான வாகன காப்புறுதி இருக்க வேண்டும் என்பது கண்டிப்பான நிபந்தனையாகும்.)

அறுபது நாட்களுக்கு மேலும் வாகனம் செலுத்த விரும்புவோர் மாகாண லைசென்சினை பெற்று வைத்திருக்க வேண்டும். இவ்வாறு கனடாவின் வேறு மாகாண லைசென்ஸ், அல்லது வேறு நாட்டு லைசென்ஸ் இல்லாதவர்கள், தங்கள் வாகனம் செலுத்திய அனுபவங்களை நிரூபிக்கும் வகையில் அம் மாகாண அல்லது நாட்டு வாகன சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகார சபையிடம் இருந்து உத்தியோக பூர்வமான அத்தாட்சிக் கடிதங்கள் சமர்பித்தாலும் ஒன்ராரியோ மாகாணத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆனால் பின்வரும் குறிப்பிட்ட நாடுகளில் மட்டும் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருந்தோர் அவர்கள் வைத்திருந்த கால அனுபவங்களின் அடிப்படையில் ஒன்ராரியோ மாகாணத்தில் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

1. கனடாவில் உள்ள ஏனைய மாகாணங்கள்
2. அமெரிக்காவில் உள்ள சகல மாகாணங்கள்
3. யப்பான் (Japan)
4. கொறியா (Republic of Korea)
5. ஆஸ்திரியா (Austria)
6. ஜேர்மனி (Germany)
7. சுவிற்சலாந்து (Switzerland)
8. ஐரோப்பிய நாடுகளில் உள்ள கனேடிய படை வீரர்களின் சாரதிப் பத்திரங்கள்

மேற்குறிப்பிட்ட நாடுகளில் அல்லது மாகாணங்களில் கடந்த மூன்று வருடங்களுக்கு இடையில் இரண்டு வருடங்களுக்கு மேலாக சாரதி அனுமதிப் பத்திரம் இருந்தால் எதுவித எழுத்துப் பரீட்சைக்கோ அல்லது வீதிப் பரீட்சைக்கோ தோற்றாது முழுமையான சாரதிப் பத்திரத்தினை (Full class "G" graduation license) எதுவித தடங்கலும் இல்லாமல் பெற்றுக் கொள்ள முடியும். (ஆனால் கண் பார்வை பரிசோதனை என்பது பரிசீலனை செய்யப்படும்)

மேற்குறிப்பிட்ட நாடுகளில் அல்லது மாகாணங்களில் கடந்த மூன்று வருடங்களுக்குள் இரண்டு வருடங்களுக்கு கீழே மட்டும் சாரதிப் பத்திரம் இருந்தால் அவர்களுக்கு G2 லைசென்ஸ் மட்டும் வழங்குவதன் மூலம் வாகனம் செலுத்தும் அனுமதி வழங்குவதுடன் இரண்டாவது வீதிப் பரீட்சைக்கு தோற்றி முழுமையான லைசென்சினை பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஒன்ராரியோ மாகாண அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மாகாணங்கள் நாடுகள் தவிர ஏனைய நாட்டு சாரதி அனுமதிப் பத்திரம் மூன்று வருடத்தினுள் இரண்டு வருடங்களுக்கு குறையாமல் இருந்தால் காலதாமதம் ஏதும் இல்லாமல் வீதிப் பரீட்சைகளுக்கு தோற்றும் சலுகை மட்டும் உள்ளது.

இவ்வாறு சாரதி அனுமதிப் பத்திரத்தினை நேரடியாக ஒன்ராரியோ மாகாணத்திற்கு மாற்ற விரும்புபவர்கள் நேரடியாக போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்திற்கு சென்று பின்வரும் விடயங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

* 16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர் என்ற அத்தாட்சி
* மாகாண சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்தல்
* ஏனைய மாகாண அல்லது நாட்டு சாரதிப் பத்திரத்தினை அதன் அனுபவ காலங்களுடன் நிரூபித்தல்
* கையொப்பம், ஆள் அடையாளங்களை நிரூபிக்கும் அடையாள அட்டைகளை சமர்பித்தல்
* கண்பார்வை பரிசீலனை

மேற்குறிப்பிட்ட அம்சங்களில் திருப்தியாக இருந்தால் உடனடியாகவே லைசென்ஸ் வாகனம் செலுத்த தகுதியான நிலையில் வழங்கப்படும். தொடரும்....

*மேலதிக தொடர்புகளிற்கு:* ***சிவ பஞ்சலிங்கம்-(416) 321-0999***
*(Professional Licensed Instructor in Car & Class Room)*







J DAYCARE
- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week -$60.00

தினசரி நடவடிக்கைகள்:-
* உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033
தொடர்புகளுக்கு: Mrs. S. J. சௌந்தரநாயகம்
151 Lamareaux Dr., TownHouse 99A
(Finch/Birchmount)

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 19

-Dr. N.S. Moorthy, Ph.D.

பருவகாலத்திற்கும் குரலுக்கும் ரிஷபம் விருச்சிகம் ஆகிய இராசிகளுக்கும் இடையிலான தொடர்புகளை முன்பு விளக்கினோம். காதல் வயப்பட்டு பாடும் பாடல்களும் சிற்றின்ப உணர்ச்சியையும் இன்பக் கிளர்ச்சியையும் உண்டாக்கக் கூடியதன்மை கொண்ட பாடல்களையும் இன்றைய சினிமாவில் நாம் நிறையக் காணக் கூடியதாக இருந்தாலும், சங்ககாலப் பாடல்களும் இவற்றிக்குக் குறைந்தவை அல்ல. அறத்துப் பாலையும் பொருட்பாலையும் நமக்குத் தந்த வள்ளுவப் பெருந்தகை காமத்துப் பாலின் பெருமையையும் உரைக்கத் தவறவிலலை.

இன்று மேலைத் தேய நாடுகளில் தொலைபேசிக் குரல்களின் மூலமே இன்பத்தை அள்ளித் தரக் கூடிய ஏற்பாடுகள் ஏராளமாகச் செய்யப்பட்டு உள்ளன. ஆசிய நா[illegible]ரும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்பத்தின் உச்சத்தை தெரிவிக்கும் முக[illegible] முனகல் கூட பல கதைகளைக் கூறவல்லன. மனிதர்கள் மட்டுமல்ல பறவைகள் விலங்குகள் கூட தமது துணையை காதல் வயப்பட்டு அழைக்கும் போது வித்தியாசமான தொனியை எழுப்புவதாக அறிவியல் அறியத் தருகிறது. காலநிலை மாற்றங்களும் இராசிகளின் பார்வைகளும் சேர்ந்தால் பிரம்மச்சாரியும், துறவியும் கூட மாறிவிடலாம். வசந்த காலத்தில் மனிதர்கள் மட்டுமன்றி சகல உயிர்களும் செழிப்புடன் காட்சியளிக்கின்றன.

ஆளானப்பட்ட விசுவாமித்திரரே தவறிவிட்டார். இதிலிருந்து விருச்சிக இராசியானது ஆழ் மனத்தின் உணர்ச்சிகளை திறமையாகத் தூண்ட வல்லது எனத் தெளிவாகிறது. ரிஷப இரசியானது தொண்டை, மூக்கு, பீனிசம் போன்ற பகுதிகளை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாலும் மலம், நீர், வியர்வை போன்ற கழிவுகளை வெளியேற்றும் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான விருச்சிக இராசியின் தவறான பார்வையால் கழிவுறுப்புகள் பாதிப்படைந்து மலச்சிக்கல், சரும நோய்கள், அதிக மணமுள்ள வியர்வை, முகப்பருக்கள், துர்நாற்றமுள்ள சுவாசம், மூட்டுவலிகள், குருதியில் யூரிக்கமிலம் அதிகரிப்பதால் ஏற்படும் மூட்டுதாபிதம் போன்ற நோய்கள் ஏற்பட ஏதுவாகின்றன. தொடரும்.....


**Moka Market**

Brampton, Mississauga மக்களுக்கு ஓர் இனிய செய்தி




உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், இறைச்சி, மீன் வகைகள், பத்திரிகைகள், தமிழ் வீடியோ, CD கசட்டுகள போன்ற தேவைகளுக்கு உங்களுக்கு மிக அருகிலேயே சேவை செய்ய வந்துள்ளது Moka Market.



- விலையோ மலிவு
- தரமோ உயர்வு

ஒருமுறை சென்று பாருங்கள் உண்மையை உணர்வீர்கள்

MOKA MARKET
900 Rathburn Rd. #5 & 6
Mississauga
தொலைபேசி: 905 273-4137





**விடுகதை**


* தண்ணீருக்குள் இடம் பிடிப்பான் தடுக்கி விழவும் வைப்பான் அவன் யார்? பாசி
* உப்பை விழுங்கியவன் உறங்காமல் ஓடித்திரிகிறான் அவன் யார்? கடல் அலை
* சங்கீதமும் பாடுவான் சலவைக்கும் உதவுவான் அவன் யார்? கழுதை
* கிணற்றைச் சுற்றி வேலி அது என்ன? கண்கள்-கண்புருவம்


YARL **WINDOW COVERING**

**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

**CUSTOM MADE..**
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES




இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377


FREE ESTIMATE

**NEW Technology**
Security and Sound Inc.




Tel: (416) 335-4070
Fax: (416) 335-9936

உங்கள் வாகனங்களுக்குத் தேவையான




Car Alarm, Remote Car Starter, LED Scanner, Stereo, Fog Lamps and Sports Accessories.
Sales And Installation

CASSETTE PLAYER STARTUP 109.99
CD CASSETTE PLAYER STARTUP 159.99



CLIFFORD The Science Of Security
toucan INDUSTRIES. INC.
VIPER
AVITAL Vehicle security
Pioneer
PRESTIGE




*We also do any Electrical*


நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும் பொருத்திக்கொள்ளவும் நாடுங்கள்.

Tel: (416) 335-4070
3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont M1V 2N3

Autobahn




**யோகா சோதிடம்**



★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்

☎: (416) 299-8361

# விளையாட்டுத் தகவல்கள் (83)


"எஸ். கணேஷ்



போடு மச்சான் பொல்லு பறக்க!!
அடிடா மச்சான் பவுண்ரி சிக்ஸர்!!!

## கிரிகெட்

உலகத்திலேயே பந்து வீச்சில் முதலிடத்தில் திகழும் தமிழ் வீரன் முரளிதரன் பிரபல துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்டுகளை எல்லாம் "பொல்லு பறக்க" வைத்துள்ளார். இன்று உலகத்தில் உள்ள சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் எல்லாம் இந்த தமிழ் வீரனின் பந்து வீச்சுக்கு தாக்கு பிடிக்காமல் திண்டாடுகின்றார்கள். பந்து விசசில் தன்நிகர் இல்லாத் தலைவரும் முரளிதரன் துடுப்பாட்டத்திலும் அதிரடி ஆட்டங்களை ஆடி பவுண்ரி சிக்ஸர்களை அடித்து கொண்டிருக்கின்றார். இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டாவது இனிங்ஸில் இந்தியாவிற்கு எதிராக 67 ஓட்டங்களை 65 பந்துகளில் அடித்து விளாசியுள்ளார். இதில் 3 சிக்கஸர்களும் 5 பவுண்ரிகளும் அடங்கும். இதில் என்ன வேடிக்கை என்னவெனில் ஸ்ரீலங்கா 2வது இனிங்சில் பெற்ற மொத்த ஓட்டங்கள் 221 ஆகும். இதில் முரளிதரன் மட்டுமே அரை சதத்திற்கு மேல் எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் 350 விக்கெட்டுகளை தாண்டியுள்ள முரளிதரன் துடுப்பாட்டத்திலும் எதிர் காலத்தில் மிளிர வேண்டும் என வாழ்த்துவோமாக!



முரளிதரனின் Record 9 விக்கெட்டுக்கள் 65 ஓட்டங்கள். இங்கிலாந்துக்கு எதிராக எடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக 8 விக்கெட்டுக்கள எடுத்து தனது வெற்றியை ஜெயசூரியாவுடன் கொண்டாடுகிறார்.

**Cocacola Cup** இல் இந்தியாவை ஸ்ரீலங்கா அணி வென்று **Cocacla Cup - 2001 Champion** ஐ தனதாக்கியுள்ளது யாவரும் அறிந்ததே. இதைத் தொடர்ந்து இந்தியாவும் ஸ்ரீலங்கா அணியும் 3 டெஸ்ட் போட்டகளில் மோதுகின்றன. இது வரை நடந்து முடிந்த இரண்டு போட்டிகளில் ஸ்ரீலங்காவும். இந்தியாவும் 1 - 1 என்ற நிலையில் உள்ளன. இதன் விபரங்களை இங்கு தருகின்றேன். இக் கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது 3வது டெஸ்ட் ஆட்டம் தொடங்கிவிட்டது. முதல் நாளிலேயே முரளிதரன் 8 விக்கெட்டுகளை எடுத்து மீண்டும் சாதனை புரிந்துள்ளார். மூன்றாவது ஆட்டத்தல் முதல் இனிங்ஸில் இந்தியாவை 234 ஓட்டங்களுடன் முரளிதரன் அடி பணிய வைத்துள்ளார். மிகுதி வீரர்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

16 வருடங்களின் பின்பு டெஸ்ட் ஆட்டத்தில் ஸ்ரீலங்கா, இந்திய அணியை வென்றுள்ளது. கடைசியாக 1985 ஆம் ஆண்டு **Duleep Mendis** தலைமையில் இந்திய அணியை ஸ்ரீலங்கா அணி தோற்கடித்தது. அதன் பின்பு 16 வருடங்களின் பின் ஜெயசூர்யா தலைமையில் 2001 ஆகஸ்ட் மாதம் மீண்டும் இந்தியாவை மண் கவ்வச் வைத்துள்ளது. இது வரை 21 டெஸ்ட் ஆட்டங்கள் இலங்கை அணியும் இந்திய அணியும் ஆடியுள்ளன. ஒரு நாள் 50 ஓவர் போட்டிகளில் பல தடவைகள் ஸ்ரீலங்கா அணி இந்திய அணியை ஓட ஓட விரட்டியுள்ளது. ஆனால் டெஸ்ட் ஆட்டத்தில் ஸ்ரீலங்கா அணி டெஸ்ட் ஜாம்பவான்களான இந்திய அணியிடம் பல தடவை மண் கவ்வியுள்ளது. அதுவும் இந்திய அணி இந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தல் மயிரிழையில் இனிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பிப் பிழைத்து 10 விக்கெட்டுகளால் ஸ்ரீலங்கா அணியிடம் தோல்வியைத் தழுவியுள்ளது.

### 1st டெஸ்ட் ஆட்டம் ஆகஸ்ட் 14, 15, 16, 17

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 95.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 187 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி சார்பாக தாஸ் 40, ரமேஸ் 42, **Kaif** 37, திராவிட் 12, கங்குலி 15 ஓட்டங்களைப் பெற்றனர். ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 123 ஓட்டங்களை எடுத்து ஒரு ஸ்திர நிலையில் இருந்த அணியை ஸ்ரீலங்கா சார்பாக பந்து விசிய **Fernando**, முரளிதரன் விக்கெட்டுகளை பிடுங்கி எறிந்தனர். இந்தியா 187 ஓட்டங்களுடன் சரணடைந்தது. **Fernando** 25 ஓவர்கள் பந்து விசி 9 மேடின் ஓவர்களை போட்டு 42 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். முரளிதரன் 24 ஓவர்கள் போட்டு 8 மேடின் ஓவர்கள் போட்டு 41 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அடுத்துக் களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 107 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 362 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஸ்ரீலங்கா சார்பாக ஜெயசூரியா 111, சங்ககாரா 105, அத்தபத்து 33, ஜெயவர்த்தனா 28 ஓட்டிங்களை பெற்றனர்.
இந்தியா சார்பாக சிறிநாத் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.


அடுத்துக் களம் இறங்கிய இந்திய அணி 74 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது. தாஸ் 23, திராவிட் 61 ஓட்டங்களைப் பெற்றனர். முரிளிதரன் 26 ஓவர்கள் பந்து வீசி 10 மேடின் ஓவர்களை போட்டு 49 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பறறனார். இந்தியா இனிங்ஸ் இல் இருத்து 6 ஓட்டங்களால் தப்பிப் பிழைத்தது. அடுத்து இறங்கிய ஸ்ரீலங்கா அணி 1.5 ஓவர்களில் 6 ஓட்டங்களை பெற்று 10 விக்கெட்டுகளால் இந்திய அணியை வெற்றி கொண்டது ஜெயசூரியா ஆட்ட நாயகன் விருதை பெற்றுக் கொண்டார்.



JUDY KHETANI
(Sales Rep.)
RE/MAX
GOLDENWAY REALTY
905 - 428 - 3310
416 - 299 - 8199

Good or Bad Credit?
Bankruptcy?
Bank Turn Down?
Buy Home with 5% down or get 3% Cash Back
For a Free Consultation


பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்
வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தாமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
416-439-3709 Pager: 375-7330


ELECTRICAL REPAIRS
உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.
முருகதாஸ் - ☎ 416-261-6883


### 2nd டெஸ்ட் ஆகஸ்ட் 22, 23, 24, 25

முதலில் களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 78 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 274 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. ஜெயவர்த்தனா 104, வாஸ் 42, அத்தபத்து 39, சங்ககாரா 31 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். இந்தியா சார்பாக கான் 3, கவந்தர் சிங் 2, பிரசாத் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

அடுத்து களம் இறங்கிய இந்திய அணி 64 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 232 ஓட்டங்களை எடுத்தது. இதில் ரமேஷ் 47, கபரஜான் சிங் 44, கங்குலி 18 ஓட்டங்களை பெற்றனர். ஸ்ரீலங்கா சார்பாக வாஸ் 4, முரளிதரன் 2, பெர்னாண்டோ 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அடுத்து இரண்டாவது இனிங்ஸில் ஸ்ரீலங்கா அணி 66 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களை எடுத்தது. அத்தபத்து 45, முரளிதரன் 67, ஜெயவர்த்தனா 25 ஓட்டங்களை எடுத்தனர். அடுத்து களம் இறங்கிய இந்திய அணி 78 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 264 ஓட்டங்களை பெற்றது. இதில் கங்குலி 98, திராவிட் 75, ரமேஷ் 31 ஓட்டங்களை எடுத்தனர். இந்திய அணி ஸ்ரீலங்கா அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றி ஈட்டியது. கங்குலி ஆட்ட நாயகன் விருதை பெற்றார். வெற்றியை 1 - 1 என்று சமமாக பங்கிட்டு கொண்ட இரு அணிகளும் மூன்றாவது டெஸ்ட் இல் வரிந்து கட்டி கொண்டு இறங்கியுள்ளன பார்ப்போம் யார் வெல்லுவார்கள் என்று???

ஸ்ரீலங்கா அணி:- அத்தபத்து, ஜெயசூரியா, சங்ககாரா, ஜெயவர்த்தனா, ஆனோல்ட், திலகரட்னா, சமரவீர, முரளதரன், வாஸ், பெர்னாண்டோ லியனகே, சுரேஸ் பெரோ.

இந்திய அணி:- தாஸ், ரமேஷ், திராவிட், கங்குலி, **Kaif, Badani, Dighe, Harbhajan Singh, Khan, Prasad Harvinder Singh, Srinath.**

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்

### *1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்கள்*

பாடகி சித்திரா



**சிந்து பைரவி:-** பாலச்சந்தரின் கைவண்ண்த்தில் உருவாகிய இப்படத்தில் நடித்தவர்கள் சிவகுமார், சுஹாசினி, சுலக்ஷனா, டெல்லி கணேஷ், ஜனகராஜ் மற்றும் பலர். 1985 ஆம் ஆண்டின் தேசிய விருதுகளில் சிறந்த நடிகைக்கான விருதை சுஹாசினியும், சிறந்த பாடகிக்கான விருதை சித்ராவும், சிறந்த இசை இளையராஜாவிற்கும் கிடைத்தது. கதை, வசனம், டைரக்ஷன் பாலச்சந்தர். இளையராஜாவும், வைரமுத்தும் இணைந்து [illegible]ளியாற்றிய வெற்றிப்படம். இப் படத்தில் [illegible]ம் 'நான் ஒரு சிந்து காவடிச் சிந்து' பாடல் ஆனது பலராலும் முணுமுணுக்கப்படும் பாடலாகும். பாலச்சந்தரின் இசையின் ஈடுபாடு அவரது பல படங்களின் பாடல்களில் இருந்து அறியக் கூடியதற்கு இப் படமும் ஒரு எடுத்துக் காட்டு.

கவிஞர் வைரமுத்து



இசைக் கலைஞன் ஒருவன் அவனுக்கு இசை அறிவில்லாத மனைவி. இரசிகை என்று கூறி அவனுக்கு சவால் விட்டு பாடும் பெண் ஒருத்தி. பின்னர் காதலியாக மாறுகிறாள். இசைக் கலைஞன், மதுவிற்கு அடிமையாகிறான். அவர்கள் வாழ்க்கையில் நடைபெறும், மனப் போராட்டங்கள் மற்றும் பாதிப்புகளை விபரிப்பதாக கதை அமைந்துள்ளது.

இதே ஆண்டில் வெளியாகிய பாலச்சந்தரின் கல்யாண அகதிகள் பெருவெற்றியடையவில்லை.

ஜனகராஜ்



சுகாஹினி ஏற்கனவே தமிழ்ப் படங்களில் நடித்திருந்தாலும் பாலச்சந்தரின் தயாரிப்பில் 'சிந்து பைரவி' இல் தான் முதன் முறையாக நடித்து தேசிய விருதும் பெற்றிருந்தார்.

சிவகுமார், மாறுபட்ட கதாபாத்திரமான இசைக் கலைஞராக திறம்பட நடித்துள்ளார். அவர் மிகுந்த அக்கறையுடன் பாடல்களை பாடும் பாவனையை மிக நன்றாக [illegible]ப்துள்ளார். அத்துடன் மதுவுக்கு அடிமையான நடிப்பிலும் தன் திறனை காட்டியுள்ளார்.

சுகாசினி



மிருதங்க வித்துவான் பாத்திரத்தில் டெல்லி கணேஷ் அரிய குணச் சித்திர நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். தமிழிசையின் சிறப்பை தெரிவிக்கும் விதத்தில் 'பாடறியேன் படிப்பறியேன்' என்று பாடி கதாநாயகனையும், இரசிகர்ளையும் திகைக்க வைக்கிறார் சுகாஹிசினி. உயர்ந்த இரசிகையாகவும், பின்பு காதலியாகவும் அவர் மாறி மிகச் சிறப்பாக நடித்துள்ளர்

இசைஞானி இளையராஜா





**JEY JEY WELDING**

- வீட்டுத் தேவைகளிற்கான சகலவிதமான Grill வேலைகளும்
- Swimming Guard Rails
- Fencing
- Safety Grills for Store
- BSMT Safety Grills
- Welding சம்பந்தமான வேலைகள்
- கோயிலிற்கு தேவையா Grill வேலைகள்

அனைத்து வேலைகளிக்கும் அழையுங்கள்: 416 439 - 7159

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின் விருது பெற்ற

**VIVEKA PRINTERS**



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு

பாதிக்கப்படும்

• CRIMINAL
• DOG BITES
• SLIP & FALL
• ACCIDENT INJURIES

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416 490-9199

அன்று இணுவிலில் கலகலப்பு
இன்று இன்ரநெற்றில் கலகலப்பு

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன்

416-490-9199

# VENTURE PLUS CAPITAL

## YOUR FINANCING SOURCE

## ANYTHING IS POSSIBLE

**WE SPECIALIZE IN**

- Business Loans
- Personal Loans
- 1st and 2nd Mortgage
- Consolidations
- Equipments Leasing
- Car Financing
- Franchises
- Buy outs
- Private Venture Capitals
- Credit Cards
- Personal Line of Credit

**பின்வரும் சேவைகள் எம்மிடம் கிடைக்கும்**

- வியாபாரக் கடன்
- தனிப்பட்ட கடன்
- 1ம் - 2ம் தர வீட்டுக்கான கடன்
- ஒன்றிணைத்தல் கடன்
- சாமான்களுக்கான (Equipment) கடன்
- வாகனக் கடன்
- கிளைகளுக்கான கடன்
- தனிப்பட்ட வென்ஷர் கடன்
- கடன் அட்டைகள்
- வென்ஷர் கடன் உத்தரவாத உறுதி

**Existing or Start up Business up to $10 Million $10k to 100k approved in 72 Hrs**

**No Financial Statement No Collateral**

**VENTURE PLUS CAPITAL**

**PERSONAL LOANS**

**$5K TO $10K**
**GOOD OR BAD CREDIT**
**NO UP FRONT FEES**
**NO DELAYS**

*WE GET YOU MORE THAN YOU COULD POSSIBLY GET ON YOUR OWN*

தமிழில் தொடர்புகளுக்கு: (கீத்) KEITH (416) 274-9980

AGENT WANTED NO QUALIFICATION NEEDED. FAX RESUME (416) 946-1175


## கணிதமும், வாழ்க்கையும்



வாழ்க்கை ஒரு கணிதம். அவற்றில் சிக்கல்களும், தீர்வுகளும் நிரம்பியுள்ளன.

கீழ்க்கண்ட குறியீட்டுப் பொன்மொழிப்படி வாழ்ந்து பாருங்கள்.

1. நல்லனவற்றைக் கூட்டிக்கொள் +
2. தீயவற்றைக் கழித்துக் கொள் -
3. அறிவைப் பெருக்கிக் கொள் X
4. நேரத்தை வகுத்துக் கொள் ÷
5. இன்ப துன்பங்களைச் சமமாய்க் கருது =
6. வளர்பிறை போல் முன்னேறு + + +
7. செலவைக் குறைத்து வரவைப் பெருக்கு <
8. அன்பைப் பெருக்கு. ஆணவத்தைக் குறை >
9. நல்லவர்களுக்கு இணையாக இரு 11
10 பிறரை நம்பி வாழும் வாழ்வு நிலையற்றது ≠


**GLOBAL**
EDUCATIONAL TRUST PLAN

**R.E.S.P. - அரசாங்க அங்கீகாரம் பெற்ற சேமிப்புத் திட்டம்**
நீங்கள் முதலிடும் தொகைக்கு அரசின் 20% மானியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உலகின் எப்பாகத்திலும் கல்வி கற்பதற்கு உங்கள் சேமிப்பைப் பயன்படுத்தலாம்.
மேலதிக விபரங்களுக்கு: **V. Sathiyaraj**
**Tel: 416 291-5853** **Cell: 416 826 - 5853**



# YARLCAN

## STEAM CLEANING

**CARPET CLEANING**





**DUCT CLEANING**



உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அழையுங்கள்
மோகன் ☎: (416) 724-9085 Cell : 721-9709



## VIMAC HOME RENOVATIONS


**SPECIALIZING IN INSTALLATION OF**
* KITCHEN CABINETS
* COUNTER TOPS
* SPACE MAKING CABINETS
* BATHROOM /LAUNDRY UNITS

**FREE ESTIMATE**

**& GENERAL HOME RENOVATION**
CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227
REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES

# அன்பு வடிவான அன்னை தெரசா

அன்பின் இலக்கணத்தைத் தனது புனித பணியின் மூலம் உலகிற்கு உணர்த்தியவர் அன்னை திரேசா. அன்பு இரக்கம் காருண்யம் இவற்றின் இருப்பிடமாம் புனிதத்தாய் அன்னை திரேசா. வஞ்சிக்கப்பட்டவர்கள், வாழ்விழந்தவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், உடல்நலம் குன்றியவர்கள் ஏழைகள் என அன்பிற்கு ஏங்கும் இதயங்கள் அனைவரையும் அன்பால் ஆண்டவர் அன்னை திரேசா. அப்புனித உள்ளத்திலிருந்து வற்றாது சுரந்த அன்பும் கருணையும் தெரேசாவை அன்னை தெரேசாவாக உலக மக்களின் இதயத்தில் கொலுவிருத்தியது.



* அன்னை தெரசாவின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்க்ஸ்கா போஜாக்லியு.
* இவரது பிறந்த நாள் 27 - 08 - 1910. * இவரது பிறந்த நாடு அல்பேனியா.
* 1928 இல் லோரட்டா சகோதரிகள் என்பவர்களுடன் சேர்ந்து தொண்டு செய்ய ஆரம்பித்தார்.
* லோரட்டாவுடன் இந்தியப் பகுதிக்கு மாற்றப்பட்டார்.
* கல்கத்தாவில் உள்ள செயிண்ட் மேரி பள்ளியில் பூகோளப் பாடம் கற்பித்துப் பிறகு பள்ளியின் முதல்வராக உயர்ந்தார் தெரசா.
* செப்டம்பர் பத்தாம் திகதி, 1964ம் வருடம் டார்ஜிலிங்கிற்கு இரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது கடவுள் தன்னை அழைத்து ஏழைகளாக இருப்பவர்களுக்காக தொண்டு செய்யச்சொன்னதாகவும் அதிலிருந்து வாழ்க்கைப் பாதை மாறியதாகவும் கூறுகிறார்.
* 1948இல் இந்தியாவின் குடிமகளாக மாறினார்.
* 1950இல் உதவி இயக்கங்களை நிறுவினார். (மிஷனரிஸ் ஆ.்.ப் சாரிடி)
* 1952இல் 'நிர்மல் ஹிருதயா ஹோம்' என்ற ஒன்றை ஏழைகளுக்காக ஏற்படுத்தினார்.
* 1962 ஆம் ஆண்டு இவரது சேவையைப் பாராட்டி இந்தியாவினால் 'பத்மஸ்ரீ'' பட்டம் வழங்கப்பட்டது.
* தொழுநோயாளிகளுக்கான குடியிருப்பைக் கல்கத்தாவில் 1964இல் ஆரம்பித்தார்.
* 1965 ஆம் ஆண்டு போப் ஆண்டவரின் பாராட்டுப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார்.
* 1966 ஆம் ஆண்டு தாய்நாடான அல்பேனியா தேசியவிருது கொடுத்துக் கௌரவித்தது.
* போப் ஆண்டவர் பரிசை 1971இலும், நேருஜியின் சமாதான மற்றும் மனித நேயப்பரிசை 1972இலும் பெற்றார்.
* 1979 ஆம் ஆண்டு சர்வதேச நோபல் பரிசு வழங்கப்பட்டது.
* 'பாரத ரத்னா' பட்டம் 1980இல் கிடைத்தது.
* மிக மதிக்கப்படும் பெண்மணி என்று 1980, 1981 இரு ஆண்டுகளில் தொடர்ந்து 'குட் ஹவுஸ் கீப்பிங்'' எனும் பத்திரிகை தேர்வு செய்தது!
* அமெரிக்கா 1996 ஆம் ஆண்டு இவரது சேவையைக் கௌரவித்து "பிரஜையாக" ஏற்றுக்கொண்டது.
* 'பிரிட்டிஷ் ஹானர்' என்ற மரியாதைக்குரிய பட்டத்தை இங்கிலாந்தும், 'மெடல் ஆடப் ப்ரீடம்' என்ற பட்டத்தை அமெரிக்காவும் 1983, 1985களில் கொடுத்தன.
* உகாண்டா வெளியிட்ட தபால் தலையில் தெரசா 1986இல் தோன்றினார்.
* டைம் இதழ் அட்டைப் படத்தில் தெரசாவை வெளியிட்டு 'வாழும் சந்நியாசினி'' என்று குறிப்பிட்டது.
* இந்தியா வந்த போப் ஆண்டவர் அன்னை தெரசாவிற்கு வெள்ளை லிங்கன் லிமோசின் என்ற பெரிய வெளிநாட்டு காரை வழங்க, அதை 10 இலட்ச ரூபாய்க்கு ஏலத்திற்கு விட்டு, ஏழைகளின் தொண்டிற்கு வழங்கினார்.
* அன்னை தெரசாவிற்கு பிடிக்காத இரு விடயங்கள்: பெண்கள் கருதச் சிதைவு செய்துகொள்வது, சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெறுவது.
* அன்னை தெரசாவிற்கு விளம்பர நிறுவனமான லிண்டாஸ் ஷோர்களில் 40 சதவிகிதம் உள்ளது. அவற்றின் மூலம் வருடம் 30,000 ரூபாய் கிடைக்கிறது. இதுவும் ஏழைப் பள்ளிக்குத்தான்.
* அமெரிக்காவில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு உதவ ஓர் இல்லத்தை உருவாக்கினார்
* தனது சேவையின் சின்னங்களாக 124 நாடுகளில் பணிமனைகளை நிறுவினார்,

உள்ளத்தை அகலாக்கி அதில் அன்பெனும் நெய்வார்த்து உடலைத் திரியாக்கி தன் சுகங்கள் அனைத்தையும் சுடராக்கி இன்னலுற்றவர்களுக்குக் (கடைப்பட்டோர்) கருணைப் பேரொளி காட்டினார் என்று கூறினால் அது மிகையாகாது.

*"கைம்மாறும் வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு*
*என்னாற்றுங் கொல்லோ உலகு"* என்பது திருக்குறள்.

அதாவது மழையானது எதுவித பலனையும் எதிர்பாராது உலக மக்களுக்கு வழங்குவதுபோல அல்பேனியாவில் பிறந்த அன்னை தெரேசா இன்னலுற்ற இந்திய மக்களுக்கு உதவியது மட்டுமல்லாது உலகம் முழுவதையும் தன் பணியினால் உற்று நோக்க வைத்தது வள்ளுவர் கூறும் ஒப்புரவுக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் அருள் வாக்கிற்கு ஏற்ப இறுதிவரை மக்கள் சேவைக்காகத் தன்னை அர்பணித்துக் கொண்டவர். இன, மத, நிற, மொழி கடந்த மனித நேயத்தால் மக்கள் மனதில் இடம் பிடித்தவர். இறுதியாக அன்னை தெரேசா செப்ரெம்பர் 05, 1997 ஆம் ஆண்டு தனது 87 வயதில் இவ்வுலகை விட்டு நீங்கினார். ஆனால் அவரது நினைவுகளும் பணிகள் காலத்தால் அழியாதவை..


**Safety Truck**
**Training School Ltd.**

**Training & Trucking Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
14 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**



**கலைமகள்**
**புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் பொருளியல்



அன்புள்ள 'உலக தமிழோசை' வாசகர்களுக்கு எனது வணக்கம். நீண்ட காலமாக உங்கள் அனைவரையும் இப் பத்திரிகை மூலம் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் இப்போது கைகூடியுள்ளது. இப்பத்திரிகை ஒரு சமூக முன்னேற்றத்தைக் குறிக்கோளாக வைத்து வெளிவருகின்றது. - இப் பத்திரிகையில் பங்கேற்க எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மிகுந்த மகிழ்ச்சி.

எனது பத்து வருடத்திற்கும் மேலான கனேடிய கணக்கியல் (Accounting) அனுபவத்தில் நான் பல வியாபார உரிமையாளர்களையும் மற்றும் பல தனி நபர்களையும் சந்தித்து அவர்களுக்கு கணக்கியல் (Accounting). வருமான வரி (Income Tax). நிதித்திட்டமிடல் (Financial Planning). சேமிப்பு (Investment) மற்றும் வீடு வாங்குவதற்கான கடன் (Mortgage) போன்ற விடயங்களில் சேவை புரியும் வாய்ப்புக்கள் கிடைத்தது.

இந்த அனுபங்களை அதாவது மேற்குறிப்பிட்ட விடயங்களில் பொதுவாக மக்கள் புரியும் சரி. பிழைகள் என்ன என்பவற்றையும் அத்துடன் மேற்குறிப்பிட்ட விடயங்களிலும். மற்றும் இவை சம்பந்தமான விடயங்களையும் மக்கள் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்ன என்பவற்றையும் இனிவரும் பிரசுரங்களில் உங்களுடன் பரிமாறலாம் என்று இருக்கின்றேன். இதன் மூலம் பலருக்கு பயனடையக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

அடுத்த இதழில் தனிநபர் வியாபாரக் கணக்குகள் பற்றியும், அவற்றை எப்படி முறையாகக் கையாள்வது பற்றியும் இவ் விடயங்களில் பொதுவாக இழைக்கப்படும் தவறுகள் என்ன என்பன பற்றியுமான விளக்கத்தை எதிர்பார்க்கலாம். மேலும் உங்களிற்கு ஏற்படும் கணக்கியல். வரி சம்பந்தமான சந்தேகங்களை எங்களுக்குத் தெரியப்படுத்தினால் அதற்கமைய பதில்களையும் தரக்கூடியதாக இருக்கும்.

*மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.*

**Mark Markandu, CGA**
**Certified General Accountant**
**416 290 0946 / 416 834 6660**

**ACTION HONDA**

நேர்மையுடன் தமிழர் நலன் கொண்ட ஈழத்தமிழராகிய **சோதீஸ்** இன் விற்பனைக்கு பின்னருமான சேவையுடன் உங்கள் புதிய பழைய வாகனங்களை எங்கும் கிடைக்காத குறைந்த விலையில் பெற அழையுங்கள்.



**416-704-1179**





என் மூலம் **VOLVO** மற்றும் **CHRYSLER** வாகனங்களையும் மலிந்த விலையில் பெற்றுக்கொள்ளவாம்

**LIFE TIME OIL CHANGE, Bad Credit? I WILL HELP YOU**

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough





**திருமண சேவை**

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவுசெய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்

☎:416-261-6219
Email:ratnam51@hotmail.com

**GB TRANSPORT**



உங்கள் வீட்டு, வணிக, அலுவலகம் சம்பந்தமான சகல பொருட்களை பாதுகாப்பாகவும், துரிதமாகவும் இடமாற்றம் செய்வதற்கு அழையுங்கள்.

HOME - 416 754 [illegible]
CELL - 416 [illegible]268
45335 1910




- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, **எங்கள் விருப்பமோ** இனிமேல் யாரும் குறைகக முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ இந்தநகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, **எங்கள் விருப்பமோ** ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமை உடன் சொல்வது
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.
- உஙகள விருப்பமோ குறித்த தவணையில பெறுவது, **எங்கள் விருப்பமோ** ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- தாலிக்கும நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை [illegible]வலைப் பார்ப்பம் என்று அலைய வேண்டாம். **ரதீக்கா நகை** மாளிகையும் **மஞ்சுளாபஷனும்** ஒரே இடத்தில்.


5635 Finch Ave. East, Unit 3
(Finch and Tapscott), Scarborough, Ont.,
M1B 5K9, Canada

☎:(416) 299-1343

**தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்**

**ரவி நடராஜா**

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள



**Accident & Traffic Ticket**
(13 Years Insurance Claims Experience)

Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

Tel: (416) 755-2801
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.



# அன்புத் தமிழ்

- கவிஞர் வி. கந்தவனம்

## அன்புடைமை

அன்பு என்று சொல்லும் பொழுது உள்ளத்திலே தேன் ஊறுகின்றது. 'அன்பர்களே' என்று அழைக்கின்ற பொழுது ஆனந்தமயமான ஓர் உணர்ச்சி தோன்றுகின்றது. வாயளவில் வெறும் சம்பிரதாயத்துக்காகச் சொல்வது வேறு, உணர்ந்து சொல்வது வேறு. 'அன்பர்களே' என்று உணர்ந்து சொல்லுகின்ற பொழுது உள்ளம் பூரிப்படைகின்றது. இந்தப் பூரிப்பு அழுக்குகள் படியாவண்ணம் மனத்தைக் காப்பாற்றிக் கொள்கின்றது. நோய்நொடிகளை அகற்றுகின்றது. என்றும் உள்ளத்தை இ[illegible]மையாக்குகின்றது.

அன்பு ஒலிகள் ஓய்வதில்லை. அன்புச் சுவடுகள் என்றும் அழிவதில்லை. அன்புத் தொடர்புகள் எளிதில் அறுவதில்லை. அன்புக்கு இணை இந்த உலகத்தில் எதுவுமே இல்லை.

அன்பு ஓர் உணர்ச்சி அளவில் மட்டும் நின்றுவிடுவதில்லை. அது ஒரு பெரிய சக்தி. அன்பு வேர் உலகத்தைத் தழைக்க வைக்கின்றது. அன்புப் பிணைப்பு அகிலத்தை மலர வைக்கின்றது.

மனிதப் பிறப்பு மிகவும் அரியது. அரிய இப்பிறப்பினை நாம் பெற்றதே அன்போடு கலந்த வாழ்க்கையை வாழ்வதற்கே என்கின்றார் வள்ளுவர் பெருமான்:

> அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
> என்போடு இயைந்த தொடர்பு.

அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பொருட்டே அரிய இந்த உயிர் உடம்பினை எடுத்திருக்கின்றது. 'என்போடு இயைந்த தொடர்பு' என்கின்றார். அதாவது, உயிருக்கும் உடலுக்கும் உள்ளத் தொடர்பே அன்புதான். அதனாலே, அன்பில்லாத வாழ்க்கை அர்த்தமற்றதாகின்றது; பயனற்றுப் போகின்றது.

> அன்பின் வழியது உயிர்நியை அஃதிலார்க்கு
> என்புதோல் போர்த்த உடம்பு.

அ[illegible] வழிநின்ற உடலே உயிர்கொண்ட உடலாம். அன்பில்லாதவர் உடல உயிரற்ற உடல்; எலும்பினைத் தோலாற் போர்த்த வெறும் உடம்பு. அதாவது, வாழ்க்கைக்கு அன்பு உயிர் போன்றது என்று வலியுறுத்துகின்றார் தெய்வப் புலவர்.



உ[illegible] உடம்பெடுப்பது வாழ்வதற்கு. வாழ்க்கையின் நோக்கம் நன்னெறிக்கண் நின்று இம்மைப் பயன்களை : அனுபவித்தல். அன்பில்லாமல் இப் பயன்களை அனுபவித்தல் இயலாது. அதனால், அன்போடு அமையாத வாழ்க்கை உயிரற்ற வாழ்க்கை ஆகின்றது. உயிருக்கு உயிரூட்டுவது அன்பு.

அன்புத் தோட்டத்திற் பலவகைப் பூக்கள். பாசம், நட்பு, காதல், பத்தி, அருள் என்பன அனைவரையும் கவரும் இனிமையான மலர்கள். பாசம் இரத்த உறவு சம்பந்தப்பட்டது. நட்பு இரத்த உறவு இல்லார்க் கிடையில் வளர்வது. காதல் தலைவன் தலைவிக்குரியது. சிறியவர் பெரியோர் மீது காட்டும் அன்பைப் பத்தி என்பர். அடியார் இறைவன் மீது செலுத்துவதும் அதுவே. வலியார் மெலியாரிடம் கொள்ளும் இரக்கம் அருள் எனப்படும். இறைவன் தன் அடியார்களுக்குப் பாலிப்பதும் அருளாகும். இவை அனைத்துக்கும் அடிப்படையாவது அன்பு.

அன்பு என்னும் அருமையான உணர்ச்சி உலகத்திலே இன்று தட்டுப்பாடாகி வருகின்றது. அன்பு அரிதாகும் பொழுது குடும்பத் தகராறுகளும் ஊர்ச் சண்டைகளும் இனத் துவேசங்களும் தலையெடுத்து வாழ்க்கைப் பயன்களைச் சீர்குலைக்கின்றன.

பத்திரிகைகளிலே நாளாந்தம் படிக்கின்றோம் - அன்புக்காக ஏங்கும் குழந்தைகள், அன்பின்றித் தவிக்கும் நோயாளிகள், அன்பு பாராட்ட முடியாது பிரிந்து செல்லுகின்ற வாழ்க்கைத் துணைவர்கள், அன்பின்றி அடிபடும் சகோதரர்கள், சுடுபடும் குடும்பங்கள் என்று எத்தனையோ குழப்பங்களைப் பற்றிப் படிக்கின்றோம்.

குடும்ப உறவுநிலை என்றில்லாது, சமூக அரசியல் மட்டங்களிற் காணப்படும் பிரச்சனைகளுக்கும் அடிப்படையில் அன்பின்மையே காரணமாகும். சமூக மட்டத்தில் சாதி, சமய, பொருளாதார, நிற வேறுபாடுகள் துவேசங்களை வளர்த்து வருகின்றன.

அரசியல் மட்டத்தில் காணப்படும் பிரதான பிரச்சனை ஒன்று அடக்கு முறை. அடக்கு முறைகளில் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை அடக்கி ஒடுக்குவதும் ஒன்று. இதனை சனநாயக முறை புறக்கணிக்கும் பொழுது சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்தை வெறுக்கின்றது. இந்த வெறுப்பு வன்முறையை வளர்த்தெடுக்கின்றது. சாதிசமய வேறுபாடு, இனத்துவேசம், அடக்குமுறை போன்றவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது அன்போடு கலந்த மனிதாபிமானம் இன்மையேயாகும்.

அன்பை அரிதாக்குவது அழுக்காறு. அன்பு உள்ளம் இயல்பாகவே சுத்தமானது. அதில் கரவு, வஞ்சகம், சூது முதலாய அழுக்குகளுக்கு இடமே இல்லை.

அன்பு அறத்துக்கு ஆதாரம். அறத்துக்கு மட்டுமன்றி மறத்துக்கும் அன்பே துணை. மறம் என்பது பகைமை உணர்ச்சி. பகைமையைப் போக்கி நட்பை வளர்க்க உதவுவது அன்பு. நட்பு வளர ஒற்றுமை வளரும். ஒற்றுமை ஓங்க அமைதி நிலவும். அமைதி நிலவில் ஆக்கம் பிறக்கும். அன்பின்றி இன்பம் இல்லை.

அன்பு வளர்க்கப்பட வேண்டிய பயிர். உள்ள அமைதிக்கன்றி உலக அமைதிக்காகவும் வளர்க்கப்பட வேண்டும். அன்புணர்ச்சியை எல்லா நிலைகளிலும் மிக அழகாக எடுத்துக் காட்டும் நூல் இராமாயணம். இராமர் கதையைப் பெரியவர்களும் சிறியவர்களும் போற்றிப் படித்துவரின் உள்ளத்தில் அன்பு ஊறும். வாழ்க்கைப் பயன்களும் தேறும்.


Neelam SILK

உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE



'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

"நீலம் சில்க்"

☎ :(416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)

* * *

புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)

# "ராசம்மாவின் ராஜ்யம்"

நகைச்சுவைத் தொடர்... (51) -கலகலப்பு தீசன்-

